10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 323 வியாழக்கிழமை 12 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## 16 எம்.பிக்கள் அரசில் இருந்து விலகினர்

கொழும்பு, ஏப். 12

நேற்று நள்ளிரவு முதல் தேசிய அரசில் இருந்து விலகுவதாக சுதந்திரக் கட்சியின் 16 எம்.பிக்கள் அறிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதே, தேசிய அரசில் இருந்து சுதந்திரக் கட்சி விலகிவிடும் என எதிர்பார்க்கப் 06▶

# ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க கோத்தா தயார்



கொழும்பு, ஏப்ரல் 12

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் தான் போட்டியிட வேண்டுமென என் சகோதரர் மகிந்த விரும்பினால், அதற்கு நான் தயார். அதற்காக அமெரிக்கக் குடியுரிமையைக் கூட கைவிடுவேன்" என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நான் தெரிவு செய்யப்படவுள்ளதாகப் பேசப்படுகிறது. அதுபற்றி முடிவு செய்வதற்கு இன்னமும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பொறுத்த விடயம். மிகச் சிறந்த வேட்பாளர் யார் என்று அவரே முடிவு செய்வார். 06▶

## யாழ். மாநகர சபையின் கடந்த கால ஊழல்களை விசாரிக்க நடவடிக்கை



### கன்னியமர்வில் முதல்வர் ஆர்னோல்ட் உறுதி

யாழ்ப்பாணம், ஏப்.12

சுத்தமான பசுமை நகரை நோக்கி எனும் தொனிப்பொருளில் மத்திய மற்றும் மாகாண அரசின் உதவிகள், ஒத்துழைப்புக்களுடன் மாநகர மக்களுக்கு பணியாற்ற அனைத்து உறுப்பினர்களும் முன்வரவேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்" என்று யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் கன்னியமர்வு யாழ். மாநகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. சகல உறுப்பினர்களும் மாலை அணிவிக்கப்பட்டு மேள, தாளத்துடன் அழைத்துவரப்பட்ட பின்னர் அமர்வு ஆரம்பமானது. 06▶



## சினேகன், வையாபுரி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.12

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்துக்கு தென்னிந்திய நடிகர்கள் படையெடுத்து வருகின்றனர். அந்தவகையில் "பிக் பாஸ்" நிகழ்ச்சி மூலம் பிரபலமான பாடலாசிரியரும், கவிஞருமான சினேகன், நகைச்சுவை நடிகர் வையாபுரி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்துகொண்டனர். (அ)

## பதில் முதலமைச்சரானார் அமைச்சர் சர்வேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஏப்.12

வட மாகாண பதில் முதலமைச்சராக, வடக்கு மாகாண கல்வியமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்தார்.

வட மாகாண முதலமைச்சர் 06▶

## திலீபனுக்கு சிலை கிட்டுவுக்கு பூங்கா

### மாநகர சபையில் மணிவண்ணன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஏப்.12

"தியாக தீபம் திலீபன் அண்ணாவுக்கு யாழ். மாநகரசபை சிலை வைத்தால் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம். 06▶

## அண்ணையால் வந்த வினை



யாழ்ப்பாணம், ஏப்.12

மாநகர முதல்வரை சபை அமர்வின் போது, "அண்ணன்" என்று விளித்த உறுப்பினர், முதல்வரின் கண்டிப்புக்கு உள்ளானார். 06▶

## ஊழல் விசாரணைக்கு நாங்கள் தயார்

### முன்னாள் முதல்வர் சவால்



யாழ்ப்பாணம், ஏப்.12

"யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக தேர்தல் காலங்களில் அரசியல் 06▶

## புலிகளின் தலைவருக்கு சிலை வைக்க ஆதரவாம்

### ஈ.பி.டி.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.12

"யாழ்ப்பாணத்தில் யாருடைய சிலையை அமைத்தாலும் நாம் பக்கபலமாக இருப்போம். தமிழீழ 06▶

## மாநகர சபையில் புலிகளின் புகழ்

யாழ்ப்பாணம், ஏப்.12

நேற்று இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வில் உரையாற்றிய பெரும்பாலான உறுப்பினர்கள், மாவீரர்களை நினைவு கூர்ந்த பின்னரே தமது உரைகளை ஆரம்பித்தனர். குறிப்பாக 06▶

## எழுந்திருக்காதது ஏன்?

### முன்னாள் முதல்வருக்கு இன்னாள் முதல்வர் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்.12

சபை நடைமுறைக்கு மாறாக, ஆசனத்தில் அமர்ந்திருந்து உரை நிகழ்த்தியமைக்காக மாநகர சபையின் முன்னாள் 06▶

## தமிழரசில் அதிருப்தி: அமைப்பாளர் விலகல்



யாழ்ப்பாணம், ஏப்.12

தமிழரசுக் கட்சிக்குள் தனிநபர் சர்வதிகாரம் தலைவிரித்தாடுவதாகக் கூறி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை தொகுதிக்கிளை தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக சபா ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சிக்குள் அண்மைக் காலமாக நிலவும் சர்வதிகாரத் தனிமனிதத் தீர்மானங்கள், ஜனநாயக விரோத 06▶

# பிரதமர் ரணிலுக்கு எதிராக போராட்டங்கள் வெடிக்கும்

## வெளிச்சம் அமைப்பு எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.12

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர் என்பதற்காக , அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் முற்படுவாரானால், அவருக்கு எதிராக பாரிய போராட்டங்கள் வெடிக்கும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் வெளிச்சம் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

சிங்களத்தில் 'எளிய' என்று அழைக்கப்படும் வெளிச்சம் அமைப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டது. இதன்போது, அந்த அமைப்பின் முக்கியஸ்தரான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

"தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவர் மீது எஞ்சியிருந்த சில நம்பிக்கைகளையும் இழந்து விட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தை அம்பலப்படுத்தியிருந்தார்.

அதற்கமைய அவர்கள் முன்வைத்த பத்து நிபந்தனைகளையும் பிரதமர் ஏற்றுக்கொண்டதாலேயே அவருக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் வாக்களித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டமைப்பினரால் பிரதமரிடம் தெரிவிக்கப்பட்ட பத்துக் கோரிக்கைகளும் இனவாத சிந்தனை கொண்டவை என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## பஸ் விபத்தில் 16 பேர் காயம்

ஹபரன, ஏப்.12

ஹபரன - மொரகஸ்வேவ பிரதேசத்தில் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், 8 பெண்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஹபரன வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலனறுவையில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளது. (ஆ)

## 3 இரவுகளுக்கு மூடப்படும்

கொழும்பு, ஏப்.12

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தெஹிவளை தேசிய மிருகக்காட்சி சாலை 3 நாட்களுக்கு , இரவு நேரங்களில் மூடப்படும் எனத் தேசிய மிருகக்காட்சி சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாளை, நாளைமறுதினம் மற்றும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் இரவு நேரங்களில் மிருகக்காட்சி சாலை மூடப்பட உள்ளது.

எனினும், குறித்த 3 தினங்களும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை இதனைப் பார்வையிட முடியும் எனவும், திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஆ)

## 2 மீனவர்கள் மாயம்

காரைநகர், ஏப்.12

காரைநகரில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரைக் கடந்த திங்கட்கிழமை முதல் காணவில்லை எனப் படகு உரிமையாளரால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறையைச் சேர்ந்த தம்பி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த பவுண் என அழைக்கப்படும் இருவருமே காணாமல் போயுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை மதியம் ஒரு மணிக்கு காரைநகர் கடற்கரையில் இருந்து றோலர் படகில் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் நயினாதீவுக் கடல் பகுதியில் தரித்து நிற்பதாக படகு உரிமையாளக்கு இருவரும் அறிவித்துள்ளனர். இதனை அடுத்து, படகு உரிமையாளர் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்த போது, அங்கு அவர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

## ஈர நிலப் பாதுகாப்பு கலந்துரையாடல்!



மட்டக்களப்பு, ஏப்.12

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ம.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான பல்வேறுபட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

"சந்துருக்கொண்டான் ஈர நிலம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்தப் பகுதியை பாதுகாத்து சூழலியல் தொடர்பான உல்லாச சுற்றுலாத்துறை கட்டியெழுப்பப்பட வேண்டும். இதனை இந்தப் பகுதி சமூகமே பொறுப்பேற்று செயற்பட வேண்டும். " என அரச அதிபர் ம.உதயகுமார் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மாநகர ஆணையாளர் என். மணிவண்ணன், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் கே. குணரெட்ணம் உட்பட பல்வேறு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஆ)

## போக்கிடம் இல்லாமல் ஜனாதிபதி மைத்திரி



தங்காலை, ஏப்.12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியை இழந்து போக்கிடம் இல்லாமல் இருக்கிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தங்காலை கால்டன் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு வீதியை நிர்மாணிக்க நிதி வழங்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் கூறுகின்றார். இந்த அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில் வீதிகளை நிர்மாணிக்கவில்லை. வீதியை அல்ல குறைந்தது ஒரு கால்வாயைக் கூட நிர்மாணிக்கவில்லை.

பொதுஜன பெரமுன வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு நிதி தர மாட்டோம் எனக் கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களை, அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றிய இவர்களால் தமது அமைச்சுப் பதவியைக் கூட காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமை உள்ளது. ஆனால், இந்த நிலைமையிலும் கூட தற்போது நாட்டின் அபிவிருத்தி பற்றி இவர்கள் பேசுகின்றமை வேடிக்கையாக உள்ளது." எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

### தொழிலாளர்களைக் கொன்றோருக்கு

## மே தினம் கொண்டாடத் தகுதியில்லை

பத்தரமுல்லை, ஏப்.12

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர் ஆகியோர் கடந்த காலங்களில் தொழிலாளர்களை கொலை செய்தனர். அவர்களுக்கு மே தினத்தைக் கொண்டாட எந்தவிதமான தகுதியும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மே தினத்துக்கு சர்வதேச ரீதியில் தொழிலாளர்களை பிரதிநிதித்துப்படுத்தும் சிவப்புக் கொடியை அந்தக் கட்சிகள் புறக்கணித்து விட்டு, தங்களது கட்சிக் கொடிகளை பறக்கவிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம். தேசிய அரசாங்கம் எவ்வளவு காலம் ஆட்சியில் இருக்குமென்பது எமக்குத் தெரியாது. எனினும், இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் காலம் வரையில் சாதாரண பொதுமக்கள் மற்றும் தொழிலாளர் நலன்சார்ந்து செயற்பட வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார். (ஆ)

## ஐ.தே.கட்சி வசமானது கிண்ணியா நகர சபை

கிண்ணியா, ஏப். 12

கிண்ணியா நகர சபையைக் கடும் போட்டிக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

இதன் முதல் அமர்வு, கிண்ணியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். வை.எம்.சலீம் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில், பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எஸ்.எச்.எம். நளீம், தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதில் எஸ்.எச்.எம்.நளீமுக்கு ஆதரவாக 9 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக ஒன்பது வாக்குகளை அளித்தன.

இரண்டாம் கட்டமாக பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக பகிரங்க வாக்களிப்பு இடம்பெற்றது. இதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஐயூப் நளீப் சப்ரீன், ஒன்பது வாக்குகள் ஆதரவாகவும் மூன்று வாக்குகள் எதிராகவும் பெற்று, பிரதித் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ஆ)



எதிரொலி
Ethiroli
வியாழன், 12 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# வெட்டு ஒன்று, துண்டு இரண்டு

முதலமைச்சர் விக்னேஸ்வரன் கொளுத்திப் போட்ட குண்டு, பெரும் அதிர்வை தமிழ் அரசியல் பரப்பில் உண்டாக்கி விட்டுள்ளது. கூட்டமைப்பில் இடம் கொடுக்கா விட்டால், பழையபடி ஆன்மீகப் பக்கமாக அவர் ஒதுங்கி விடுவார் என்றே தமிழரசுக் கட்சியினர் எதிர்பார்த்திருந்தனர்.

அப்படியும் அவருக்கு ஏன் இடம் கொடுக்கவில்லை என்று யாரேனும் கேள்வியெழுப்பினால், நிர்வாகத் திறனற்றதாக மாகாணசபையை நடத்தியவருக்கு எப்படி மீண்டும் இடம் கொடுக்க முடியும்? என்று சொல்லி அடக்கிவிடலாம் என்பதே அவர்களின் கணிப்பு. முதலமைச்சருக்கு ஆதரவாக ஒரேநாளில் ஆயிரக்கணக்கான மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டபோதே அவருக்குள்ள மக்கள் செல்வாக்கை தமிழரசுக் கட்சி புரிந்து கொண்டிருக்கவேண்டும். அதுவும் கூட்டமைப்புக்கான வாக்கு வங்கி, உள்ளூராட்சித் தேர்தலில் அடிவாங்கியுள்ள தருணத்தில் முதலமைச்சரை மீண்டும் தமிழரசுக் கட்சி ஆளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே கூட்டமைப்பு மீதான மக்கள் ஆதரவை மீட்டெடுக்க உதவும். ஆனால் எப்படிப்பட்டாலும் தமிழரசுக் கட்சியினர் திருந்தப்போவதில்லை' என்பதையே, கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனின் அறிவிப்பு உணர்த்தியிருந்தது. "சுமந்திரன் தமிழரசுக் கட்சியினதோ, கூட்டமைப்பினதோ தலைவர் அல்லவே. அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். எனவே அவர் கூறியது தனிப்பட்ட கருத்துத்தான். அதைக் கட்சியின் முடிவாகக் கொள்ளமுடியாது" என சிலர் வரிந்து கட்டிக் கொண்டு வாதம் செய்யலாம். ஆனால் சுமந்திரன் சொல்வதே கூட்டமைப்பின் முடிவு என்பது சிறுபிள்ளைக்கும் தெரியும். கட்சியின் உயர்மட்டத்தில் சுமந்திரன் சொல்வதை எதிர்க்கும் திராணி எவருக்கும் இல்லை. எனவே தான், கட்சியின் தலைவருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் விருப்பமில்லாத நிலையிலும் யாழ். மாநகரசபை முதல்வராக ஆர்னோல்டை நியமிக்க சுமந்திரனால் முடிந்தது. இது ஒன்றே போதும், சுமந்திரனின் சொல்லுக்கு கட்சி மட்டத்தில் இருக்கும் செல்வாக்கை அறிந்து கொள்ள.

எனவேதான், சுமந்திரனின் கருத்துக்கு மறுத்தான் அடித்து, தனக்கு தமிழரசுக் கட்சி இடம் கொடுக்காவிட்டாலும் அரசியலில் இருந்து ஒதுங்கிப் போகாமல், தனிக் கட்சியாகவோ, பொதுக் கூட்டணி மூலமோ முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவேன் என்று விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். ஆயினும் அவர் இந்த முடிவை தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட சமயத்தில், அவருக்காக ஆயிரக்கணக்கான மக்கள் கிளர்ந்தபோதே, தமிழரசுக் கட்சியினை உதறிவிட்டு தனியாக வந்திருந்தால், இப்போது அவர் பின்னால் பலமான கூட்டணி ஒன்று உருவாகியிருக்கும். உள்ளூராட்சித் தேர்தலில் இப்போது வாங்கியதை விடவும் கூட்டமைப்பு பலமான அடியை வாங்கியிருக்கும். அதனை அடிப்படையாக வைத்து மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் தலைமையிலான கூட்டணி இலகுவான வெற்றியை அடைந்திருக்க முடியும்.

இப்போதும் காலம் கடக்கவில்லையாயினும், முதலமைச்சர் தன்னுடைய பழைய பாணியில் வாரத்துக்கொரு அறிக்கைவிடுவதை மட்டுமே அரசியல் நடவடிக்கையாகத் தொடர்ந்தால், கூட்டமைப்பைத் தோற்கடித்து அவர் முதலமைச்சராக முடியாது. இந்தியாவில் இருந்து திரும்பியதும் முதலமைச்சர் தன்னுடைய மதில் மேல் பூனை முறையைக் கைவிட்டு, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என நறுக்குத் தெறித்தாற்போன்று கருத்துகளைச் சொல்வதோடு, நடைமுறை அரசியலுக்கு ஏற்றபடி தன்னைத் தகவமைத்துக் கொள்ளவும் வேண்டும். மிக முக்கியமாக மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து, தன்னுடைய அரசியல் தளத்தை உறுதி செய்யவேண்டும். பட்டுவேட்டி கசங்கிவிடும் என மக்களிடம் இருந்து எட்டவாக நின்றால், அவரும் தன் வீழ்ச்சியைச் சந்திக்கத் தயாராகவேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# அமைச்சர் வீட்டில் மந்திராலோசனை

கொழும்பு, ஏப். 12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன் தினம் இரவு பத்தரமுல்லையில் உள்ள அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவின் வீட்டில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று மீண்டும் நடைபெறவிருந்த நிலையில், நீண்ட நேரமாக இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு அளித்த, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள், கூட்டு அரசாங்கத்தில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். அதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றுபட்ட முடிவை எடுக்கும் நோக்கில் மத்திய குழுக் கூட்டத்தை மீண்டும் நேற்றுக் கூட்டி முடிவெடுப்பதாக அறிவித்திருந்தார். ஆயினும் அந்தக் கூட்டம் நடைபெறவில்லை.

இந்த நிலையிலேயே, அரசில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நீண்ட நேரம் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான எந்த தகவலும் வெளியாகவில்லை. (அ)

# திருவுளச்சீட்டின் துணையால் நானாட்டான் கூட்டமைப்புக்கு



மன்னார், ஏப்.12

மன்னார், நானாட்டான் பிரதேச சபையை திருவுளச்சீட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர் தெரிவுகள் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த சபையின் தலைவர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதியும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் றோஜர் ஸ்ராலினும் முன்மொழியப்பட்டனர்.

சபையில் உள்ள 16 உறுப்பினர்களில் 10 உறுப்பினர்கள் இரகசிய வாக்களிப்புக்கு ஆதரவளித்தமையால் இரகசிய வாக்களிப்பு இடம்பெற்றது. எனினும்இரண்டு உறுப்பினர்களும் 8 வாக்குகளைப்பெற்று சமநிலையை பெற்றனர். இந்த நிலையில், திருவுளச் சீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து நானாட்டான் பிரதேச சபையின் உப தலைவருக்கான தெரிவு இடம்பெற்ற வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் போ.லூர்து நாயகம் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த அமர்வில் அமைச்சர் ரிசாட் பதியுதீன், பிரதி அமைச்சர் அமீர் அலி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், மாகாண சபை உறுப்பினர்களான பிரிமூஸ் சிறாய்வா, அலிக்கான் சரீப், எம்.கே.சிவாஜிலிங்கம், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எஸ்.முஜாஹிர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் றிப்கான்பதியுதீன் உள்ளிட்ட பலரும்கலந்து கொண்டிருந்தனர். (அ)

# மனோ வசமாகிறதா மைத்திரியின் அமைச்சு?



கொழும்பு, ஏப்.12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசமுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, மனோகணேசனின் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின்கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

கூட்டரசின் அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் 13 ஆம் திகதிக்குள் நடைபெறவுள்ளது. இதன்போது விஞ்ஞானபூர்வமான அடிப்படையிலேயே அமைச்சர்களுக்கான துறைகள் ஒதுக்கப்படவுள்ளன.

இதன்படி ஒரே விடயதானத்துடன் தொடர்புடைய திட்டங்களுக்கு தனித்தனியே அமைச்சுகளை நியமிக்காமல் அவை அனைத்தையும் ஒரே அமைச்சின்கீழ் கொண்டுவருவதே ஜனாதிபதியின் திட்டமாக இருக்கின்றது. தனது இந்த நிலைப்பாட்டை நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் வெளிப்படுத்தியுள்ளார்.

அவ்வேளையிலேயே தனது கட்டுப்பாட்டின்கீழுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, மனோகணேசன் தற்போது வகிக்கும் அமைச்சுடன் இணைக்கப்படும் என்ற தகவலையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். போக்குவரத்து, கல்வி உள்ளிட்ட அமைச்சுகளுக்கும் இதே நடைமுறை கடைப்பிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# மாவாப் போதைப்பொருள் சூத்திரதாரி புத்தளத்தில்!

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிய மாவா போதைப் பொருள் விற்பனை நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட 7 பேரையும் வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில், சந்தேகநபர்கள் 7 பேருக்கும் எதிராக தனித்தனியே முதல் அறிக்கை முன்வைத்து பொலிஸார் முற்படுத்தினர்.

"இந்தப் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. மாவா போதைப் பொருள் விற்பனை வலையமைப்பை யாழ்ப்பாணக் குடாநாட்டில் முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வியாபாரத்தில் ஈடுபடும் புத்தளத்தில் வசிக்கும் முக்கிய சூத்திரதாரி உள்ளிட்ட மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளனர். எனவே இந்த சந்தேக நபர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்றிடம் கோருகின்றோம்" என்று பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். முதல் அறிக்கையை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்கள் 7 பேரையும் வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ)

## இன்று நாளும் கோளும்

12.04.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 29 ஆம் நாள்

ஏகாதசி மு.ப. 07.25 வரை | சதயம் மு.ப. 02.33 வரை | குளிகை 09.00-10.30

இராகுகாலம் 01.30- 03.00 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் காலை 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதவி | சுபம் | ஆக்கம் | தேர்ச்சி | ஆர்வம் | நன்மை | பாராட்டு | சிந்தனை | அமைதி | பாசம் | விருத்தி | பரிசு |

## ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு இல்லை

கொழும்பு, ஏப்.12

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்கள் சொந்தப் பணத்தில் செலவு செய்து தேர்தல் கடமைகளுக்குச் சென்றிருந்த போதிலும், இதுவரை அதற்கான கொடுப்பன வுகள் வழங்கப்படாமை கவலைக்குரியது என்று அந்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டி உள்ளார். (ஆ)

# அமைச்சுப் பதவியில் இருக்க மாட்டேன்

## தயாசிறி தெரிவிப்பு



கொழும்பு,ஏப். 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தையின் பின்னரே நல்லாட்சி அரசாங்கத்தில் தொடர்ந்து இருப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் எடுக்கப்படும். அமைச்சுப் பதவியில் நீண்ட காலம் நான் இருக்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணை அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பகுதியில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த நல்லாட்சி அரசு ஐக்கிய தேசியக் கட்சியினுடையது என்றே சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், அது அப்படியல்ல. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் போன்று, ஐக்கிய தேசியக் கட்சியினரும் பின்வாங்கிவிட்டனர். அவர்கள் மிக விரைவில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்துகொள்வார்கள் .

அரசாங்கத்துக்குள் பிளவு நிலை இருப்பதாக சுதந்திரக் கட்சி உணர்ந்து கொண்டுள்ள போதிலும், அதனை ஏற்றுக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இல்லை . அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு தனக்கு எவரும் பணிக்கவில்லை. " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## கைவிடப்பட்ட காரில் ஹெரோயின்

கடுவலை, ஏப். 12

கடுவலைப் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற கார் ஒன்றில் இருந்து ஒருதொகை ஹெரோயின் கைப் பற்றப்பட்டுள்ளது.

பின்னர் கைவிடப்பட்டிருந்த நிலையில் இருந்த அந்தக்காரைப் பொலிஸார் சோதனையிட்டபோது, அதில் இருந்து 56 கிராம் 100 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

மீட்கப்பட்ட கார் தற்போது அத்துருகிரிய பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த நிலையில் , குறித்த காரின் உரிமையாளரைக் கண்டறியும் பொருட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஆ)

## காணாமல் போனோர் அலுவலகத்தில் பதவி வெற்றிடங்கள் !

கொழும்பு, ஏப்.12

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இங்கு, பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், ஊடக உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர், ஆய்வு உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்கள், தரவு உள்ளீட்டாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகள் போன்ற பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்களை இலக்கம் 37, காணாமல் போனோர் அலுவலகம், நாரஹென்பிட்டி, நாவல என்ற முகவரிக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். (ஆ)

## கண்டி, திகன சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

கண்டி, ஏப் 12

கண்டி, திகன, தெல்தெனிய ஆகிய பகுதிகளில் கடந்த மார்ச் மாத ஆரம்ப காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட உள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மூவரின் உறவினர்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட உள்ளது.

மேலும், இதில் காயமடைந்தவர்களுக்கு அரச வைத்திய அறிக்கையின் அடிப்படையில் ஆகக் கூடியது 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்பட உள்ளது.

இதுதொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி. எம்.சுவாமிநாதன் வழங்கிய ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. (ஆ)




## இராணுவ விமானம் விபத்து: 200க்கும் அதிகமானோர் சாவு

அல்ஜைர்ஸ், ஏப்.12

வட மேற்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 200 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அல்ஜீரியாவின் பவுபாரிக் விமானத்தளத்தில் இருந்து சுமார் 200 பேருடன் இந்த விமானம் நேற்று புறப்பட்டுள்ளது. இந்த நிலையில் , வடக்குப் பகுதியில் உள்ள பெசார் என்ற நகரத்தை நோக்கி சென்று கொண்டிருந்த விமானம், நடுவானில் பறந்து கொண்டிருக்கும் போது திடீரென கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

லயுஷின் இல் 76 என்ற பெயருடைய ரஷ்ய தயாரிப்பான இந்த விமானத்தில் இராணுவ வீரர்களைத் தவிர பயணிகளும் இருந்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்துச் சம்பவித்த இடத்துக்குச் சுமார் 14 அம்புயுலன்ஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## அரச காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்.12

பெருந்தோட்டப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்காக தோட்ட நிர்வாகத்துக்கு உட்பட்ட அரச காணிகளில் இருந்து காணிகளைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதி மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக 843 பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் அந்தப் பாடசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணி போதுமானதாக இருக்கவில்லை. இதனால், அனைத்துப் பாடசாலைகளுக்கும் இரண்டு ஏக்கர் காணிகளை ஒதுக்கீடு செய்ய அரசாங்கத்தால் கொள்கை ரீதியில் உடன்பாடு காணப்பட்டிருந்தது .

இதன் பின்னரான காலப் பகுதியில் தோட்டங்கள் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் மீண்டும் கையளிக்கப்பட்டது.

இதனால், தோட்டப் பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய இரண்டு ஏக்கர் காணிகள் அந்தப் பாடசாலை அபிவிருத்திக்காக சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இதற்கமைவாக 7 மாவட்டங்களில் அமைந்துள்ள தற்போது வரையறுக்கப்பட்ட காணிக்குள் நடத்தப்பட்டு வரும் 354 பாடசாலைகளுக்கும், ஆகக்கூடிய வகையில் தலா 2 ஏக்கர் வீதம் குறிப்பிட்ட நிறுவனத்திடம் இருந்து காணியை சுவீகரிப்பதற்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் மற்றும் அரச தொழில்துறை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் லக்ஷமன், பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கா ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. (ஆ)

# இலங்கை சுகாதார சேவை உலகத்தரம் வாய்ந்தது!

## உலக சுகாதார ஸ்தாபனம் புகழாரம்

கொழும்பு, ஏப்.12

இலங்கை சுகாதார சேவை ஆசிய நாடுகளில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியிலும் தரம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் டெட்ரோஸ் அதநொம் ஜெப்ரயேசஸ் தெரிவித்துள்ளார்.


கடந்த வாரம் நடைபெற்ற உலக சுகாதார தின வைபவத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை குறைந்த வருமானத்தைப் பெறும் நாடாக இருந்தது. ஆனால், தற்போது நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடாக மாறியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டின் இலவச சுகாதார சேவை தரமானதாக அமைந்துள்ளது. இது வளர்முக நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# மாட்டுப் பண்ணைக்கு நேற்று மூடு விழா





சாவகச்சேரி, ஏப்.12

சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் சட்டத்துக்கு முரணாக சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் இருந்த மாட்டுப் பண்ணை மற்றும் கொல்களம் என்பன சாவகச்சேரி நகரசபையினரால் நேற்று புதன் கிழமை சீல் வைக்கப்பட்டது.

வருடக்கணக்கில் அகற்றப்பட முடியாமல் காணப்பட்ட இந்தக் கொல்களம் புதிய நகரசபை உறுப்பினர்களின் அதிரடி நடவடிக்கையால் சீல் வைக்கப்பட்டது.

குறித்த மாட்டுப் பண்னை உரிமையாளருக்கு ஒரு நாள் அவகாசம் கொடுக்கப்பட்டு அதில் இருந்த 200க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் என்னபன உடனடியாக அப்புறப்படுத்திய பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், பொதுச் சுகாதார பரிசோதகர், நகரசபை உறுப்பினர்களான நிதிகேசன், உதயசங்கர், நடனதேவன் மற்றும் பொலிஸார் ஆகியோர் இந்த சீல் வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஆ)

## கல்வி சாரா ஊழியர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 12

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு அரசாங்கம் ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் எதிர் வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பணிக்கு திரும்பாவிட்டால் அவர்கள் பணியில் இருந்து சுயமாக விலகிக் கொண்டதாகக் கருதப்படுவார்கள் என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்கள் 17ஆம் திகதிக்கு முன்னர் பணிக்கு திரும்பாவிட்டால், அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காலத்துக்குரிய சம்பளத்தை வழங்காதிருப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஆ)

## புத்தாண்டை முன்னிட்டு மக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.12

சித்திரைப் புத்தாண்டு நெருங்கும் வேளையில், தகுந்த பாதுகாப்புடன் இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

இது குறித்து நாடளாவிய ரீதியில் உள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் பொதுமக்களுக்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸாரால் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

புத்தாண்டை ஒட்டிய காலப் பகுதிகளில் வீட்டை விட்டுச் செல்வதாயின் வீட்டுக் கதவு, ஜன்னல் போன்றவற்றை நன்றாகப் பூட்டி வைத்து விட்டுச் செல்லுமாறும், பணம், மற்றும் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பெறுமதி மிக்க உடமைகளை பாதுகாப்பாக பத்திரப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பணக் கொடுக்கல் வாங்கல் செய்யும் நிறுவனங்கள், வர்த்தக வியாபார நிலையங்கள் ஆகியவற்றுக்கு வரும் நபர்கள் தொடர்பாக எந்நேரமும் விழிப்பாக இருக்கும்படியும் வாகனங்களைப் பாதுகாப்பான இடங்களில் நிறுத்தி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏதாவது சம்பவங்கள், சந்தேகத்துக்கிடமான நபர்கள் தொடர்பில் தெரியவந்தால் தயக்கமின்றி உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஆ)

## கனிய வள ஆய்வை துரிதப்படுத்தத் திட்டம்

கொழும்பு, ஏப். 12

நாட்டில் கனிய வள ஆய்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை வாயு தொடர்பிலான அபிவிருத்திக்காகசிறியளவிலான கேள்வி மனு கோருவதற்கும், ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள கனிய வள அபிவிருத்தி செயலாளர் அலுவலகத்தால் நடடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் இரண்டு பகுதிகளில் காணப்பட்ட இயற்கை எரிவாயு படிவத்தைக் கண்டறிவதற்கான ஆய்வை மேற்கொள்வதற்காக கேள்வி மனு அறிவிப்பு எதிர்வரும் மே மாதம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதற்காக கிழக்குக் கரையோரப் பகுதியிலும், ஆழமற்ற கடல்பிரதேசத்திலும் எரிபொருள் ஆய்வு நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடம் உடன்படிக்கை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு , மேட்டுத் தரை கரையோரப் பகுதியின் எரிபொருள் ஆய்வு தொடர்பிலும் கவனம் செலுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த எரிபொருள் ஆய்வு தயாரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மற்றும் திட்டம் தொடர்பில் எரிபொருள் வள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜூன ரணதுங்க வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஆ)






தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 72 ஆவது ஆண்டு விழாவும், முன்னாள் தலைவர் சிவஸ்ரீ. சிவ . கணேசலிங்கக் குருக்கள் ஐயாவின் 11ஆவது ஆண்டு நினைவு தினமும் , கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய சிவகடாஷக் குருக்கள் இசை அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சின்மயா மிஷன் சுவாமி சிதாகாஷானந்தா கலந்து கொண்டார். இதில் சிவஸ்ரீ சு. தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை பிரதித் தலைவர் பிரம்மஸ்ரீ சு. வரதராஜா நிகழ்த்தினார்.

நிகழ்வில் மாணவர்களுடைய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



## சூழலை அறியாமல் விசரிலை அலம்பினால்....! ஆர் பொறுப்பு?

குக்குடம் தன் கூவலினால்
கீழ் திசையில் செங்கதிராம்
பொற் குடம் திறந்ததெனத் துள்ளும்
வாய் பொத்தி இனி நிற்பதாகச் சொல்லும்.

செக்கமுற வண்ணமுற
செங்கிரோன் வந்துவிட்டால்
வெட்கம் விட்டு வாய் வலிக்கக் கூறும்
அந்த வேளையிலே ஞானம் வந்து மேவும்

நக்கி நக்கி நரகலை
நாவினிக்கத் தின்னுகின்ற
குக்கலுக்கும் ஞானம் வரக் கூடும்
இனி நக்குவதில்லை என்றே கூறும்.
பக்கமொரு எச்சிலிலை
பந்திவிட்டு வந்துவிழ
நக்கித்தின்னத் தனை மறந்து ஓடும்
அந்த வேளையிலே ஞானம் விடை கூறும்.

இந்தக் கவிதையின்ரை பொருளைச் சொன்னால்தான் உங்களுக்குச் சிலது விளங்கும். ஒரு நாள் சேவல் எழும்பிச் சொல்லுமாம் " நான் கூவித்தான் சூரியன் உதிக்குது. காலை விடியிது. ஆனபடியால் நான் இனிமேல் கூவப்போறதில்லை. பாப்பம் சூரியன் என்ன செய்யப்போறார் எண்டு. சொல்லிப் போட்டுப் படுத்திடுமாம். மற்ற நாள் வழக்கம்போலை சூரியனும் தன்பாட்டிலை உதிச்சு அதின்ரை வெளிச்சம் உலகத்துக்கெல்லாம் பட்டுத் தெறிக்கேக்கை அந்த வெக்கம் கெட்ட அறிவில்லாத சேவல் என்ன செய்யும் எண்டால் "வெக்கம் விட்டு வாய் வலிக்கக் கூவும்" வெக்கமில்லாமல் கூவிப்போடும். அந்த நேரத்திலை சேவலுக்கு ஒரு ஞானம் வரும். சூரியன் உதிச்சுத் தான் தங்களை எல்லாம் கூவப் பண்ணுது எண்டு.

அது மாதிரித்தான் சில ஆக்களும். தங்களாலைதான் காரியம் நடக்கிது எண்டு ஒரு போலிக் கற்பனையை மனதுக்குள்ளை வைச்சுக் கொண்டு திரியினம்.

அந்தக் கவிதையிலை அடுத்த பந்தியிலை என்ன சொல்லினம் எண்டால். நக்கி நக்கி நரகத்தைத் தின்னுகிற நாய்க்கு ஒரு புது யோசனை வருமாம். மனுசர் போடுற எச்சிலிலை எல்லாத்தையும் நான் நக்கித் துப்பரவு செய்யிறன். அதாலை உலகம் எவ்வளவு நாறாமல் சுத்தமாக் கிடக்கு. ஆனபடியால் இனி நக்கமாட்டன் எண்டு சொல்லிப் போட்டுப் படுத்திருக்குமாம். பிறகு கொஞ்ச நேரத்தாலை "டக்" எண்டு ஒரு சத்தம் கேக்குமாம். பாத்தால் ஆரோ ஒராள் தான் சாப்பிட்ட எச்சில் இலையைக் கொண்டு வந்து போடுற சத்தம் கேட்ட உடனை நாய் தான் யோசிச்சு பிடிச்ச விரதத்தையும் மறந்து போய் அந்த இலையிலை இருக்கிற எல்லாத்தையும் நக்கித் தின்ன ஓடுமாம். அப்ப நாய்க்கொரு ஞான உதயம் வருமாம்.

இப்பிடி ஞானம் வாற ஆக்களும் இருக்கினம். இப்ப பல பிரச்சினையள் புதுசு புதுசுப் பிறக்கிற மாதிரிக் கிடக்கு. இப்ப சுமந்திரன் நினைக்கிறதைப் பாத்தால் தான் ஒரு தேவதூதன் எண்ட மாதிரியும், கர்த்தரின் பரசுத்த ஆவியாலை கழுவுப்பட்டாள் எண்ட மாதிரியும் தான் ஒரு நீதிமான் எண்ட மாதிரியும், ஏவாளின்ரை முலைப்பாலைக் குடிச்சு ஞானம் பெற்ற மாதிரியும், தன்னை பத்துப் பதினைஞ்சு சகாப்தத்துக்கு மேலை சனம் புள்ளடி போட்டு பாளிமென்டுக்குத் தெரிவு செய்து அனுப்பிக் கொண்டிருக்கிற மாதிரியும், அந்த அனுபவத்தைக் கொண்டு தான் அரசியலை நடத்திக் கொண்டு வாற மாதிரியும் நான் முன்னம் சொன்ன சேவலைப் போலையும், நாயைப் போலையும் ஒரு போலியான விளக்கத்தோடை இருக்கிறார்.

முதல் இந்த அப்புக்காத்துத் தம்பி சொல்லட்டும் அடுத்த வட மாகாண எலக்சனிலை முதலமைச்சராகப் போட்டி போடப்போறது ஆர் எண்டு. மாவையோ? இல்லாட்டித் தானோ? எண்டதை தெளிவாச் சொல்லட்டும்.

தம்பி சுமோ நீ உப்பிடியான நோக்கத்திலை வாறதெண்டதை இந்த வில்லங்கம் விநாசி பல தடவை சொல்லிப் போட்டான். வில்லங்கத்தான்ரை பேனை ஒரு நாளும் பொய் எழுதாது. ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு இப்ப ஆளைக் கடிக்கிறமாதிரியான ஒரு சூழலிலை நீ வந்திருக்கிறாய். நான் திரும்பவும் சொல்லுறன். "குருவி ஒரு கூட்டுக்கு ஆசைப்படலாம். அந்தக் குருவி வீட்டுக்கு ஆசைப்பட்டால் வில்லங்கந்தான் வரும்" எண்டு அப்பு அடிக்கடிச சொல்லுறவர். கவனம்.

- வில்லங்கம் விநாசி

# சு.க.மத்தியகுழுக் கூட்டம் கடைசி நேரத்தில் ரத்து

கொழும்பு, ஏப்.12

கொழும்பு அரசியல் அரங்கில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடைசி நேரத்தில் பிற்போடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த கூட்டு அரசாங்கத்தில் தொடர்ந்து நீடிப்பதா- விலகிக் கொள்வதா என்று நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறியிருந்தது.

எனினும், காரணம் ஏதும் கூறப்படாமல் இந்த மத்திய குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

கூட்டு அரசாங்கத்தில் நீடிப்பது தொடர்பான விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்தக் குழப்பம் நீடிப்பதாலேயே மத்திய குழுக் கூட்டம் பிற்போடப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



யாழ். மாநகர சபையின் கன்னியமர்வு நேற்று நடைபெற்றது. இதற்காக மாநகர சபை உறுப்பினர்கள் வரவேற்பளிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டபோது...

## தொடர்ச்சிகள்

### கடந்த கால... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் தனது கன்னியுரையை மாநகர முதல்வர் ஆர்னோல்ட் நிகழ்த்தினார்.

"தமிழ்த் தேசியத்தின் மீது கொள்கையும் தீராத உறுதியும் கொண்டவன் நான். நாம் மக்களின் நெடிய வீரலாற்றினைக் கடந்துகொண்டு வருகின்றோம். தமிழ் பேசும் மக்கள் என்ற பொது அடையாளத்துடன், பல்வேறு கட்சிகளாகவும், குழுக்களாகவும் பிரிந்து, நாம் தேர்தலை எதிர்நோக்கினோம்.

யாழ்.மாநகரத்தின் சுற்றுச்சூழல் மற்றும் மக்களும், அவர்களின் வாழ்வாதாரமும், வாழ்க்கைத்தரமும் இந்த நகரால் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். யாழ். மாநகர சபையின் முதல்வராக கடமைப்பொறுப்பினை ஏற்ற நாளில் இருந்து மாணவனாக நிர்வாகத்துறைகளின் செயற்பாடுகளையும், மக்களின் தேவைகளையும், கழிவகற்றல் முகாமைத்துவ்ம், வர்த்தக தொழில்துறை உட்பட ஊழியர்கள், அதிகாரிகள், நிதிசார்ந்த விடயங்களையும் கண்டறிந்து கொண்டேன். எனது மாநகர சபையில் உள்ள தேவைகளையும், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. யாழ்.மாநகர சபைக் கட்டடம் புதுப்பொலிவுடன் அதே இடத்தில் அமையும். மாநகரத்தின் திண்மக் கழிவகற்றல் முறைமை வினைத்திறனுடன் செயற்பட்டு, நகரம் சுத்தமாக்கப்படும்.

மாநகரத்தின் மக்கள் உடனடியாக தொடர்புகொள்ள புதிய பொறிமுறைகளை உருவாக்கவுள்ளோம். யாழ். மாநகரத்தின் நிர்வாக விடயத்தினை சரியான முறையில் முன்னெடுக்க வேண்டும். இந்த மாநகரத்தின் முன்னேற்றத்திற்கு மாநகர சபையின் ஊழியர்கள் அனைவரும் பங்காளர்களே யாழ். மாநகர சபையில் வினைத்திறனான நிர்வாகத்தினை நடத்திக் காட்டுவோம். எனவே, கடந்த காலத்தில் யாழ். மாநகர சபையில் பல்வேறு முறைகேடுகள் இடம் பெற்றன. அந்த முறைப்பாடுகள் உரிய முறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

### குதிக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறக் கூடிய- பொருத்தமான வேட்பாளர் யார் என்பது அவருக்குத் தெரியும்.

எனினும் ஜனாதிபதிப் பதவிக்கு மகிந்த ராஜபக்சவை விட, பொருத்தமானவர் வேறு எவரும் இல்லை. மக்கள் ஆதரவையும், பிரபலத்தையும், தற்போதைய சூழ்நிலையில் தேவைப்படும் தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளவர் அவர். அவர் அனுபவம் மிக்கவர்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தினால், துரதிர்ஷ்டவசமாக, அவர் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட முடியாது. அவரது ஆதரவைப் பெற்ற எவரேனும் ஒருவரால் தான் வெற்றி பெற முடியும்.

அவர் நான் போட்டியிட வேண்டுமென நினைத்தால், நான் போட்டியிடுவேன். அதற்காக முன்வருவேன். போட்டியிடுவதற்கான ஆற்றல் எனக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்.

அமெரிக்காவில் குடியுரிமையைக் கொண்டுள்ளதால், இரட்டைக் குடியுரிமை அதற்குத் தடையாக இருக்கிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தினால் இப்போது என்னால் போட்டியிட முடியாது. இருந்தாலும், என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், இரட்டைக் குடியுரிமையை கைவிடும் செயல்முறைக்குச் செல்லவும் தயார்" என்று கோத்தாபய தெரிவித்துள்ளார். (அ)

### எழுந்திருக்காதது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வரும், இப்போதைய உறுப்பினருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா, இப்போதையை முதல்வர் ஆர்னோல்டிடம் வாங்கிக் கட்டினார்.

யாழ். மாநகரச பையின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்றபோது, யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா இருக்கையில் அமர்ந்திருந்தவாறு உரையாற்றினார். அதன்பின்னர் குறுக்கிட்ட மாநகர முதல்வர் ஆர்னோல்ட் "சபை உறுப்பினர்கள் சபையின் மாண்பினைப் பேணும்வகையில் எழுந்துநின்று உரையாற்ற வேண்டும்" எனக் கூறினார்.

எனினும் இதற்கு முன்னாள் முதல்வர் உடனடியாகப் பதிலளிக்கவில்லை. ஆயினும் சபை அமர்வு முடியும்போது "அண்மையில் காலில் சத்திரசிகிச்சை செய்துகொண்டதாலேயே எழுந்து நின்று உரையாற்ற முடியவில்லை" என்று அவர் குறிப்பிட்டார். (அ)

### திலீபனுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று மாவீரர்களின் பெயரில் முன்னர் இருந்த வீதிகளுக்கு மீண்டும் அவர்களது பெயர்கள் சூட்டப்படவேண்டும். கிட்டு பூங்கா புனரமைக்கப்பட்டு மீண்டும் கிட்டு பூங்கா எனப் பெயர் சூட்டப்படவேண்டும்" என வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், யாழ். மாநகரசபை உறுப்பினருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

நேற்று நடைபெற்ற யாழ் மாநகரசபையின் கன்னி அமர்வின்போதே, மணிவண்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் ஒரு கட்சியிலிருந்து இந்த மாநகரசபைக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் எங்களுக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. இந்தப் பிரதேச மக்களுடைய அபிவிருத்தியை நாங்கள் மனதிலே நிறுத்தி செயற்பட வேண்டும். அந்தக் கடமைப்பாட்டை நாங்கள் எங்களுடைய மனதிலே முன்னிறுத்தி பணியாற்றவேண்டும்.

எமது முதலாவது செயற்பாடாக திலீபன் அண்ணாவுக்கு சிலை அமைப்பதனை முன்னெடுக்கவே நாங்கள் விரும்புகின்றோம்.

நல்லூரின் வடக்கு வீதியிலே தியாக தீபம் திலீபன் அண்ணாவின் நினைவுக் கல் ஒன்று இருந்தது. அவ்விடத்திலேயே அவர் உண்ணாவிரதமிருந்தார். அந்த இடமும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். அதேபோல பேரினவாதிகளால் அழிக்கப்பட்ட தியாகதீபம் திலீபன் அண்ணாவின் தூபியை அழிக்கப்பட்ட - அடக்கு முறையின் -நினைவுச் சின்னமாக வைத்துக்கொண்டு அதன் அருகில் புதிய தூபியை அமைத்தால் சிறப்பாக இருக்கும் .

முத்திரைச் சந்தியிலே கிட்டுபூங்கா என ஒரு பூங்கா இருந்தது. அதனுடைய பெயரை சங்கிலியன் பூங்கா என்று மாற்றிவிட்டார்கள். அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக மாற்றுவதற்கு நாங்கள் சபையில் முன்மொழிவுகளைச் செய்யவேண்டும். இது சிதைவடைந்த ஒரு பற்றைக் காடாக மாறியுள்ளது. அதனை மீண்டும் கிட்டு பூங்காவாக நாங்கள் மீள நிர்மாணிக்க வேண்டும். 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் அது எவ்வாறு கிட்டு பூங்காவாக இருந்ததோ அவ்வாறு அது மாற்றியமைக்கப்படவேண்டும்.

விடுதலைப் போராட்டத்திலே பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களைக் கௌரவிக்கும் விதமாக யாழ் மாநகரசபைப் பகுதிக்குள்ளே உள்ள வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் முன்னர் சூட்டப்பட்டிருந்தன. சில வீதிகளுக்கு இப்போது வேறு பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. அந்த வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் மீண்டும் மாவீரர்களின் பெயர்கள் வீதிகளுக்கு இடப்படவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில் விடுதலைக்காகப் போராடிய போராளிகளுக்கு மாத்திரமே சிலைவைக்க வேண்டுமே தவிர விடுதலைக்கு எதிராகப் போராடிய அரச இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கி தமிழ் மக்களின் அழிவுக்குக் காரணமானவர்களுக்கு சிலை வைப்பது பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகவே இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

### மாநகர சபையில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தமது உரைகளில் அடிக்கடி புலிகளைப் பற்றியும் மாவீரர்களைப் பற்றியும், பிரஸ்தாபித்தார்கள். இதன்போது கரவொலிகள் காதைப் பிளந்தன. அத்தோடு சிலை வைப்பு விவகாரமே நேற்றைய அமர்வில் பிரதான இடத்தைப் பிடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ)

### தமிழரசில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் போன்ற காரணங்களாலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், தன்னுடைய ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் உத்தியோகபூர்வமாக இந்த முடிவைக் கட்சிக்கு அடுத்தவாரம் அறிவிக்கவுள்ளதாகவும் தன்னுடைய முகநூல் பக்கத்தில் சபா ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் தவிசாளரான சபா ரவீந்திரன், இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் கட்சியால் புறக்கணிக்கப்பட்டிருந்தார் என்பதும், பருத்தித்துறை நகரசபைக்கான வேட்பாளர்கள் அனைவரையும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனே தீர்மானித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

### பதில் முதலமைச்சரானார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.விக்னேஸ்வரன் 14 நாட்கள் வெளிநாடு சென்றுள்ள நிலையிலேயே, அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் பதில் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

### ஊழல் விசாரணைக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நோக்கத்துக்காகவே கூறப்பட்டு வந்தது. அவ்வாறான ஊழல் மோசடிகள் குறித்தான எந்த விசாரணைக்கும் நாம் தயார்" என்று தெரிவித்துள்ளார் மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், தற்போதைய உறுப்பினருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா.

மாநகரசபையின் முதல் அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"யாழ். மாநகர சபையில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களே எம்மீது ஊழல் குற்றச்சாட்டினை முன்வைக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எந்தவொரு விசாரணைக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். அதற்கு பூரண ஒத்துழைப்பினையும் வழங்குவேன்" என்றார். (அ)

### அண்ணையால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகரசபையின் நேற்றைய கன்னி அமர்வில் உரையாற்றிய , மாநகரசபை உறுப்பினர் ப. தர்சானந் உரையாற்றும் போது, யாழ். மாநகர முதல்வரை ஆர்னோல்ட் "அண்ணன்" என விளித்துப் பேசினார்.

இதனையடுத்து முதல்வர் ஆர்னோட் "அண்ணன், தம்பி பாசத்தை இங்கு சபை அமர்வுகளில் காட்டத் தேவையில்லை. அதையெல்லாம் வெளியில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு சபையின் மாண்பினைப் பேணும்வகையில் முதல்வரை கௌரவ முதல்வர் என்றும் சபை உறுப்பினர்களை கௌரவ உறுப்பினர்கள் என்றும் அழையுங்கள்" என தர்சானந்துக்கு கண்டிப்புடன் அறிவுறுத்தினார். அதன் பின்னர் குறித்த உறுப்பினர் மறந்தும் கூட, அண்ணன் என்று அழைக்கவில்லை. (அ)

### புலிகளின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு சிலை வைத்தால் கூட நாம் எதிர்க்க மாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பி கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளரும், மாநகர சபை உறுப்பினருமான வே. குகேந்திரன்(ஜெகன்).

மாநகரசபையின் முதல் அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சிலைகள் வைக்கப்பட வேண்டும் என இங்குள்ள பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டோம். நீங்கள் யாருடைய சிலையை வேண்டுமானாலும் நிறுவலாம். அதற்கு நாம் பக்க பலமாக இருப்போம். நாங்கள் இந்த சபையில் ஒரு கூட்டுக் குடும்பமாகச் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி விசாரணைக்கு நாம் பூரண ஒத்துழைப்புத் தருவோம். அதே போன்று தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நடவடிககைகளுக்கும் எமது ஒத்துழைப்பையும் இந்தச் சபையில் வழங்குவோம்" என்று அவர் தெரிவித்தார். (அ)

### 16 எம்.பிக்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. ஆயினும் சுதந்திரக் கட்சியின் ஒருசாரார் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிப்பதையே விரும்பினர். இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்த 16 அமைச்சர்களும், பொது எதிரணியோடு இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகின. குறித்த 16 பேரும் தனித்து இயங்கப் போவதாகவும் அறிவித்தனர்.

இந்தநிலையில் நேற்று மத்தியகுழுக் கூட்டத்தில் அரசோடு அங்கம் வகிப்பதா, இல்லையா என்று அறிவிக்கப்படும் என சுதந்திரக் கட்சியின் மைத்திரி தெரிவித்திருந்தார். ஆயினும் மத்தியகுழுக் கூட்டம் நடைபெறவில்லை. இந்த நிலையிலேயே தாங்கள் 16 பேரும் அரசில் இருந்து விலகுவதாக அமைச்சர் அபேவர்த்தன நேற்றிரவு தெரிவித்தார். (அ)

## பிரான்சில் கடத்தப்பட்ட ஈழத்து யுவதி மீட்பு!

பாரிஸ்,ஏப்.12

பிரான்ஸில் வைத்துக் கடத்தப்பட்ட ஈழத்து யுவதி (வயது -17) மூன்று வாரங்களின் பின் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி இந்த யுவதியை மூன்று நபர்கள் வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த யுவதி மீட்கப்பட்டுள்ளார்.

அவரின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை என அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் யுவதியின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஆ)

# ரஜினி, கமலைக் கண்டித்து கர்நாடகாவில் போராட்டம்!

மைசூர், ஏப்.12

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகியோரைக் கண்டித்து கர்நாடக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்காவிட்டால் தமிழர்களின் கோபத்துக்கு மத்திய அரசு ஆளாகும்." என்று நடிகர் ரஜினிகாந்தும், "காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும்"



என்று நடிகர் கமல்ஹாசனும் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், இதற்கு எதிப்புத் தெரிவித்து, கர்நாடக மாநிலம் மைசூரில் அமைந்துள்ள காவிரி நீர்ப்பாசன அலுவலகம் முன்பு நேற்று விவசாயிகள் போராட்டம் நடத்தினர். அப்போது ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகியோர் நடித்துத் திரைக்கு வரும் படங்களை கர்நாடகத்தில் திரையிடக்கூடாது என்று விவசாயிகள் கோஷங்களை எழுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

## ஜப்பான் தாத்தாவுக்கு கின்னஸ் அங்கீகாரம்

டோக்கியோ, ஏப்.12

உலகில் அதிக வயதான ஆண் மகனாக ஜப்பானைச் சேர்ந்த மசாஸோ நோனாக்கா( வயது-112) என்பவருக்கு கின்னஸ் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

உலகில் அதிக காலம் வாழ்ந்துவரும் ஆண், பெண்களுக்கு உலக சாதனைப் பதிவுகளை நிர்வகித்துவரும் கின்னஸ் நிறுவனம், அங்கீகாரம் அளித்துச் சிறப்பித்து வருவது வழமை.

அந்த வகையில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீயென்னி லூயிஸ் கால்மென்ட் என்ற பெண்மணி மிக அதிக காலம் வாழ்ந்த நபராக அறியப்படுகிறார். 122 ஆண்டுகளும் 164 நாட்களும் உயிர் வாழ்ந்த இவர் கடந்த 1997 ஆம் ஆண்டு உயிரிழ்ந்தார். அவரைத் தொடர்ந்து, 116 ஆண்டுகளும் 54 நாட்களும் உயிர் வாழ்ந்து, கடந்த 2013 ஆம் ஆண்டு உயிரிழந்த ஜிரோய்மோன் கிமுரா என்பவர் கின்னஸ் சான்றுகளின்படி மிக அதிக காலம் வாழ்ந்தவராகக் கருதப்பட்டார்.

இந்த நிலையில், உலகில் மிக வயதான நபராக அறியப்பட்ட ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரான்சிஸ்க்கோ நுனேஸ் ஒலிவேரா இந்த வருடம் ஜனவரி மாதம் தனது 113 ஆவது வயதில் உயிரிழந்தார்.



இதைத் தொடர்ந்து, ஜப்பானைச் மசாஸோ நோனாக்கா என்பவரை உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான ஆண்மகனாகக் கின்னஸ் நிறுவனம் நேற்று அங்கிகரித்துள்ளது.

இவர் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து சுமார் 900 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஹொக்கைடோ தீவில் கடந்த 1905 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 25 ஆம் திகதி பிறந்தார். மசாஸோ நோனாக்கா, இளம் வயதில் விவசாயம் மற்றும் மரம் வெட்டும் தொழிலில் ஈடுபாட்டார்.

பின்னர், அஷோரா பகுதியில் 'ஸ்பா' எனப்படும் அழகு நிலையம் நடத்தி வந்த இவருக்கு இரு மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர். இவரைச் சிறப்பிக்க நடத்தப்பட்ட விழாவில் மசாஸோ, நோனாக்கா தனது குடும்பத்தாருடன் கலந்து கொண்டார். (ஆ)

## வீடு திரும்பினார்

### ரஷ்ய உளவாளியின் மகள்

லண்டன், ஏப்.12

பிரிட்டனில் இடம்பெற்ற மர்ம நச்சுத் தாக்குதலால் கோமா நிலையிலிருந்த ரஷ்ய முன்னாள் உளவாளி செர்கெய் ஸ்கிரிபாலின் மகள் யூலியா, பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ரஷ்ய இராணுவ உளவு அமைப்பில் பணியாற்றி வந்த செர்கெய் ஸ்க்ரிபால் (வயது -66), பிரிட்டனின் உளவுப் பிரிவான எம்.ஐ.6 இலும் ரகசியமாக இணைந்து பிரிட்டனுக்கு இராணுவ ரகசியங்களை அளித்து வந்தார். அவரது நடவடிக்கையைக் கண்டுபிடித்த ரஷ்ய அதிகாரிகள், கடந்த 2004 ஆம் ஆண்டு செர்கெய் ஸ்கிரிபாலை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



எனினும், உளவுக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட செர்கெய் ஸ்கிரிபால் பிரிட்டனில் வசித்து வந்தார்.

இந்த நிலையில், செர்கெய் ஸ்கிரிபால் மற்றும் அவரது மகள் யூலியா (வயது-33) ஆகியோர் மீது கடந்த மாதம் 4 ஆம் திகதி நச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து, இருவரும் கோமா நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில், யூலியாவின் உடல் நலனில் முன்னேற்றம் ஏற்பட்டு, தற்போது அவர் பூரண குணமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நச்சுத் தாக்குதலுக்கு ரஷ்யாதான் காரணம் என்று பிரிட்டன் அரசு குற்றம் சாட்டி வருகிறது. எனினும் ரஷ்யா அந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்து வருகிறது.

இந்த விவகாரத்தில் பிரிட்டனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள் ஆகியவை தங்கள் நாடுகளிலிருந்து 150 இற்கும் மேற்பட்ட ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறு உத்தரவிட்டன. இதனால், ரஷ்யாவுக்கும் மேற்கத்தய நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## புடவையில் பிரிட்டன் இளவரசி



லண்டன், ஏப்.12

பிரிட்டனின் வருங்கால இளவரசி புடவையுடன் உள்ள புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

பிரித்தானியா இளவரசர் ஹரி, எதிவரும் மே மாதம் 19 ஆம் திகதி மேகன் மெர்க்கல் என்பவரைத் திருமணம் செய்யவுள்ளார். இந்த நிலையில் இவர்களுக்குக் கிடைக்கவுள்ள திருமணப் பரிசுப்பொருட்களைத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கி, அதன் மூலம் தேவை உடையவர்களுக்கு கொடுக்கவுள்ளனர். இதற்காக 7 தொண்டு நிறுவனங்களை அவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில், ஐ.நா. சபையுடன் தொடர்புடைய இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஒன்று இதில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், அந்தத் தொண்டு நிறுவனத்தை பார்வையிடுவதற்காக மெர்க்கல் அண்மையில் இந்தியா சென்றிருந்தார். அப்போது அவர் இந்திய பாரம்பரிய முறைப்படி புடவை அணிந்திருந்த புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## மன்னிப்பு கோரினார் மார்க் ஸுகர்பேர்க்!

வொஷிங்டன், ஏப்.12

பேஸ்புக்கில் இருந்து தகவல்கள் கசிந்த விவகாரம் தொடர்பில் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவிடம் பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஸுகர்பேர்க் மன்னிப்பு கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக சுமார் 5 கோடி அமெரிக்க மக்களின் தகவல்களைப் பேஸ்புக் நிறுவனம், லண்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்னும் நிறுவனத்துக்கு வழங்கியதாக பகிரங்கமான குற்றச்சாட்டு வெடித்தது.

இதுதொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்றத்தின் விசரணைக்குழு முன் பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஸுகர்பேர்க் நேற்றுமுன்தினம் ஆஜராகி இருந்தார்.

அப்போது, "கல்லூரிப் பருவத்தில் நான் தான் பேஸ்புக் சமூக வலைத்தளத்தைத் தொடங்கினேன். அதை நானே நடத்தி வருகிறேன். சுமார் 200 கோடி மக்கள் தங்களுக்கு மிகவும் வேண்டியவர்களுடன் தங்களது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைப் பேஸ்புக் மூலம் பகிர்ந்து கொள்கின்றனர். எங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக அகன்ற தொலைநோக்குப் பார்வையைச் செலுத்தாமல் போனது மிகப் பெரிய தவறு. பேஸ்புக் நிறுவனத்தை நடத்தி வருவதால் அதில் நடக்கும் தவறுகளுக்கு நானே முழு பொறுப்பாளி என்பதால், மன்னிப்பு கோருகிறேன்." என அவர் தெரிவித்தார். (ஆ)

## சீனப் பேரரசர் சிலை வீழ்ந்தது மண்ணில்

பீஜிங், ஏப்.12

சீனாவின் பின்சோயு நகரில் வீசிய பலத்த காற்றால், அங்கு நிறுவப்பட்டிருந்த 62 அடி உயர சீனப் பேரரசர் குயின் ஷி ஹூயாங் கின் முழு உருவ வெண்கலச் சிலை மண்ணில் வீழ்ந்துள்ளது.

ஷாங்டாய் மாகாணத்தில் பின்சோயு நகரில், சீனாவின் முதல் பேரரசர் குயின் ஷி ஹூயாங் கின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது. 62 அடி (19 மீற்றர்) உயரம் உள்ள இந்தச் சிலை, பின்சோயு நகரின் அடையாளச் சின்னமாக திகழ்ந்தது.

பேரரசர் குயின் ஷி ஹூயாங் சீனாவில் குயின் பேரரசை நிறுவியவர் ஆவார். இவர் கி.மு. 206 முதல் 221 வரை ஆட்சி செய்தார். சீனப் பெருஞ்சுவரின் முதல் பகுதியை இவர் தான் கட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



# அரியாலை கரப்பந்தாட்டம்: சம்பியனானது ஆவரங்கால் மத்தி

## 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் வெற்றி



யாழ்ப்பாணம், ஏப். 10

அரியாலையின் 99ஆவது சுதேச விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில், 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்தியும், 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞரும் சம்பினாகின.

அரியாலையின் 99ஆவது சுதேச விழாவை முன்னிட்டு 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின், இறுதியாட்டங்கள் நேற்று இரவு அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றன.

இதில், முதலில் நடைபெற்ற 'பி' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில், நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில், 3:2 என்ற சுற்றுக் கணக்கில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று, சம்பியனானது.

பின்னர் நடைபெற்ற 'ஏ' பிரிவினருக்கான ஆட்டத்தில் அச்சுவேலி யூத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் 25:19 , 25:15, 24:26, 25:19 என்ற புள்ளிக் கணக்கணக்கில் முன்னிலை வகித்த மத்திய விளையாட்டுக் கழகம், 3:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியர்னது. (ஐ)

**ஐ.பி.எல். இன்றைய போட்டி**
**ஹைதராபாத் சன்ரைசர்ஸ்**
**எதிர்**
**மும்பை இந்தியன்ஸ்**
**(இரவு 8 மணி)**

# ஐ.பி.எல். போட்டிகள் சென்னையில் இனி இல்லை



சென்னை, ஏப். 12

சென்னையில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவதற்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர். இதனால், போட்டிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் என ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற போட்டியின்போது பெரும் களேபரம் ஏற்பட்டது. இதனால், அங்கு நடைபெறவிருந்த ஏனைய போட்டிகள் மற்ற இடங்களுக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து டில்லியில் ஐ.பி.எல். நிர்வாகம் முக்கிய ஆலோசனை நடத்திவருகிறது என்று தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், சென்னையில் நடக்கவிருந்த ஐ.பி.எல். போட்டிக்கான நுழைவுச் சீட்டு விற்பனை ஒத்திவைக்கப்படுவதாக தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்குப் பதிலாக பிற மாநிலங்களின் 4 மைதானங்கள் பரிசீலிக்கப்படுகிறது என ஐ.பி.எல். நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

விசாகப்பட்டினம், ராஞ்சி, திருவனந்தபுரம், புனே மைதானங்களே பரிசீலனையில் உள்ளன.

சென்னையில் நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறும் இடங்கள் குறித்த அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# தாச்சியில் வைகறை அசத்தல்



யாழ்ப்பாணம், ஏப். 12

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த தாச்சித் தொடரின் சம்பியனாக புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நாவலர் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த தாச்சித் தொடரின், இறுதியாட்டம் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில், 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியானது. (ஐ)

# அன்பு குறையாத ஜடேயா

சென்னை, ஏப். 12

ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாடி வரும் ஜடேயா, சென்னை ரசிகர்களின் நலனில் அக்கறை இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரும் போராட்டம் காரணமாக, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின்போது, ரசிகர்கள் செருப்பை எறிந்தனர்.

இந்நிலையில், தனது ருவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவைப் போட்டுள்ளார் ஜடேயா.

அதில், சென்னை ரசிகர்களின் நலனில் எமக்கும் அக்கறையுள்ளது. அவர்கள் மீதான அன்பு என்றும் நிலைத்திருக்கும் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# செருப்பு வீச்சு



சென்னை, ஏப். 12

சென்னை அணி வீரர்கள் மீது செருப்பு வீசிய ஆர்ப்பாட்டக்காரர்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி நடைபெற்று வரும் போராட்டத்தைத் திசை திருப்ப வேண்டாம் எனக் கூறி, நேற்று முன்தினம் சென்னையில் நடந்த ஐ.பி.எல். போட்டிக்கு எதிராக போராட்டம் வெடித்தது.

போட்டி நடந்து கொண்டிருந்த போது, சென்னை அணியினர் மீது செருப்பு வீசப்பட்டது. 8ஆவது ஓவரின் முதல் பந்து வீசிய போதே செருப்பு வீசினர். குறித்த நபர்களை பொலிஸார் கைது செய்தனர்

சென்னை வீரர்களைச் சந்தித்துவிட்டு டு பிளசிஸ் பெவிலியன் திரும்பும் போது செருப்பு வீசியுள்ளனர். இதை கையிலெடுத்த சென்னை வீரர் டு பிளசிஸ், ரசிகர்களை பார்த்து பேசாமல் அமைதியாக நின்றார். இந்தப் புகைப்படம் வைரலாகப் பரவி வரும் நிலையில், பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

சென்னை வெள்ளத்தின் போது மக்களுக்கு ஆறுதலாக ருவிட் போட்டு வருத்தத்தைப் பதிவு செய்தவர் டு பிளசிஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)



# 16 வயதுப் பிரிவில் சென். பற்றிக்ஸ் அசத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில், 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி மோதியது.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு கோல்களைப் போட்ட சென். பற்றிக்ஸ் அணி, கடைசிவரை இந்த முன்னிலையைத் தக்கவைத்து, 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கியது. (ஐ-20)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.